Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTMBER 9, 2021

வியாழக்கிழமை செப்டெம்பர் 09, 2021 | ஒளி: 07 கதிர்: 96 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

## நீர் கட்டணத்துக்கு சலுகை காலம்



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலிலுள்ள காலத்தில் நீர் கட்டணத்தை செலுத்துவதற்கு சலுகைக் காலத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### 13ஆம் திகதியன்று நாட்டை

## திறப்பது கவனம்

### திட்டங்களை வகுத்து பகிரங்கப்படுத்துமாறும் கோரிக்கை

எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டை திறப்பதாயின், அதற்கு முன்னர் உரிய வகையில் திட்டங்களை முன் கூட்டியே உருவாக்கி, அதனை பகிரங்கப்படுத்துவது பொருத்தமானது என பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### வத்திக்கான் பயணம்

# மறைக்கும் முயற்சி

### மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மூடிமறைப்பதற்கு மிகவும் சூட்சுமமான முறையில் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, வத்திக்கானுக்கான பயணமும், சர்வதேசத்துக்குச் சென்று மறைக்கும் முயற்சியாகும் என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவில் வத்திகானுக்குச் சென்று பாப்பாண்டவரையும் சந்திக்கவுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இது சர்வதேசத்திடம் சென்று அதற்கு உள்ளே மறைந்து கொள்ள முன்னெடுக்கும் கீழ்மட்டமான செயற்பாடாகும் எனத் தெரிவித்துள்ள அவர், இந்தக் கீழ்மட்டமான வேலையை முன்னெடுக்க வேண்டாம் என பிரதமரிடமும் வெளிவிவகார அமைச்சரிடமும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



## குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றம்

### ஆதரிக்க மனமில்லாமல் அ.தி.மு.கவினர் வெளியேறினர்: மு.க.ஸ்டாலின் சாடல்

**சென்னை**

குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று (08) நிறைவேற்றப்பட்டது.

அதன் போது உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இது இலங்கைத் தமிழர்களை காயப்படுத்துகிறது. இந்தச் சட்டம் அகதிகளை தழுவுவதற்குப் பதிலாக மதம் மற்றும் பிறப்பிட அடிப்படையில் பிரிப்பதாக உள்ளது எனத் தெரிவித்த அவர், இது நாட்டின் மதச்சார்பின்மைக்கு எதிரானது என்றார்.

தொடர்ச்சி P2

## அது உண்மை...



தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு தெரிவான நான், அந்தத் தேசிய பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்யவுள்ளேன் என உறுதிப்படுத்திய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங்கியின் ஆளுநராக மீண்டும் இவ்வாரம் பதவியேற்ற உள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### கொரோனா தொற்று நிலைமையை பயன்படுத்தி

## பிணை கேட்க முடியாது

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் சந்தேக நபர்களுக்காக பிணை கோரிக்கையை சமர்ப்பிக்கும் போது கொரோனா வைரஸ் தொற்று நிலைமையை விசேட காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (08) தீர்ப்பளித்துள்ளது.

தொடர்ச்சி P2



## பிரதமருடன்

ஜப்பான், டோக்கியோவில் நடைபெற்ற பராலிம்பிக் 2020இல் ஈட்டி எறிதல் போட்டியினூடாக புதிய உலக சாதனையை நிலைநாட்டி தாய்நாட்டை தங்கத்தால் அலங்கரித்த தினேஷ் பிரியந்த ஹேரத் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற சமித துலான் கொடிதுவக்கு ஆகியோர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்று (09) சந்தித்தனர்.

## கர்ப்பம் தரிப்பதை ஒரு வருடம் பிற்போடவும்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொவிட்-19 நிலைமை காரணமாக, இயலுமான வகையில் கர்ப்பம் தரிப்பதை ஒரு வருடத்திற்கு பிற்போட்டுக்கொள்ளுமாறு விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஹர்ஷ அத்தபத்து கோரிக்கை விடுக்கின்றார்.

சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். கொரோனா வைரஸ் நாளுக்கு நாள் வீரியம் அடைந்து வருகின்றது. புதிய பிறழ்வுகளும் உருவாகியுள்ளன. கொரோனா வைரஸால் தாய்மாருக்கு பிரச்சினை கிடையாது என்ற நிலைமை மாற்றமடைந்துள்ளது என்றார்.

கர்ப்பணி தாய்மாருக்கு கொரோனா வைரஸ் தொற்றுமானால், அதியுயர் அபாயகரமான நிலைமையாகவே கருத வேண்டும். தாய்க்கும், சேய்க்கும் ஆபத்தான விடயமாகும் என்றார்.

தொடர்ச்சி P2



## விருந்தினர்கள் பறந்தனர்; மணமக்களுக்கு எதிராக வழக்கு

**எம்.றொசாந்த்**

அச்சுவேலி வடக்கில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டதாக குற்றஞ்சாட்டி பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வில் பங்கேற்றிருந்த விருந்தினர்களை அங்கிருந்து அனுப்பிவிட்டு மணமக்கள் உள்ளிட்ட சிலரிடம் கொரோனா தொற்று பரிசோதனையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கில் நேற்று (08) திருமண நிகழ்வு இடம்பெற்றது. மணமகன் மிருசுவிலைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றிருப்பதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. அதனையடுத்து, அவ்வீட்டுக்குச் சென்ற பொலிஸார் விருந்தினர்களை அங்கிருந்து செல்லுமாறு பணித்தனர்.

அத்துடன், மணமகன், மணமகள் இருவருக்கும் அவர்களுடன் நெருக்கமான உறவினர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனையை முன்னெடுக்க சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கோரப்பட்டுள்ளது.

அதனையடுத்தே, சுகாதார கட்டுப்பாடுகளை மீறி திருமண வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் மீது மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி நீதிமன்றில் முற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் கூறினர்.

## யாழுக்கு நாமல் இன்று விஜயம்



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ். மாவட்டத்திற்கான கண்காணிப்பு விஜயமொன்றை இன்று (09) மேற்கொள்ளவுள்ளார்.

அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசாங்கத்தின் அனுசரணையில் யாழில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்களை நேரில் கண்காணித்து அவற்றை துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரது யாழ். விஜயம் அமையவுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமலில் உள்ள நிலையில், அமைச்சரின் வருகையை முன்னிட்டு எவ்வித விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

கொவிட் 19 தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியிலான அபிவிருத்தி செயற்பாடுகளை அரசாங்கம் தடையின்றி முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சி.விக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

## சதித்திட்டம் ஊடாக கடிதம் வலிந்து திணிக்கப்பட்டது

### சீ.வி.கே விளக்கம்: சபையைக் கலைக்க கோரவில்லை என்கிறார்

**எம்.றொசாந்த்**



வடமாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான கடிதம் சதித்திட்டம் ஊடாக என்னிடம் வலிந்து திணிக்கப்பட்டது எனத் தெரிவித்த வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், கடிதம் எழுதியதற்கு எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றார்.

தொடர்ச்சி P2

## 4,200 ஒக்ஸ் மீட்டர்கள் சிக்கின



**டி.கே.ஜீ.கபில்**

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 4,200 ஒக்ஸ் மீட்டர்கள் சுங்க அதிகாரிகளால் செப்டெம்பர் 6ஆம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளன.

21 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டிருந்த அந்த ஒக்ஸி மீட்டர்களின் உள்ளூர் சந்தை பெறுமதி 23 இலட்சத்து 44 ஆயிரத்து 642 ரூபாயாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஒக்ஸி மீட்டர்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு இலங்கை ஔடத ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் அனுமதி பெறப்படவில்லை என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் சுங்கத் திணைக்களத்துக்கும் இறக்குமதி தீர்வையும் செலுத்தப்படவில்லை.

தொடர்ச்சி P2

## இருப்பை பாதுகாத்து முன்னோக்கி நகர்வோம்

### வேலுகுமார் எம்.பி கோரிக்கை: அடிமைகளாக இருக்க முடியாது என்கிறார்

"மலையக மக்களின் இருப்பை சிதைத்து, வாழ்வாதாரத்தை அழித்து, பெருந்தோட்டத் தொழிலாளர்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்துக்கொள்வதற்கான நகர்வையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.



இம்முயற்சியை முறியடித்து, எம்மக்களின் இருப்பை பாதுகாத்துக்கொண்டு முன்னோக்கி பயணிப்பதற்கு மலையக இளைஞர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள்,

தொடர்ச்சி P2

## அபகரிக்கப்படும் தோட்ட காணிகளின் முழு விவரம்

பாரியளவிலான வர்த்தக ரீதியான பால் பண்ணைகளை அமைப்பதற்காக தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் காணி வழங்கல் தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரமொன்றை விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, முன்வைத்துள்ளார். அதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில்,

தொடர்ச்சி P2

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு ஒத்திவைப்பு

முழுச் செய்தி P4

PAGE 1 தொடர்ச்சிகள்

# திறப்பது கவனம்

கொழும்பில் நேற்று (8) இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கொரோனா பரவலைக் கட்டப்படுத்துவதற்காக ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது இந்நிலையில், ஊரடங்கை நீக்கி நாட்டை இந்த மாதம் 13ஆம் திகதி தொடக்கம் திறப்பதாயின் அன்றைய தினம் சமூக, பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய முறை குறித்து, அந்தந்த பிரிவுக்கு பொறுப்பான அதிகாரிகள் திட்டமிட்டு அதனை பகிரங்கப்படுத்த வேண்டும்.

அவ்வாறு பகிரங்கப்படுத்தினால் நாட்டைத் திறப்பதற்கு தகுந்த சூழ்நிலை உள்ளதாக திருப்தியடையலாம். நாடு திறக்கப்பட்டதும் பொருளாதார நடவடிக்கைகளை

> **நாடு திறக்கப்பட்டதும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள், அதனை எவ்வாறு சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய, முன்னெடுப்பதென திட்டமிட்டு, செயற்படுத்துவதற்கு தயாராக இருந்தார்கள் என்றால், நாட்டை திறப்பதில் பிரச்சினை இல்லை**

முன்னெடுப்பவர்கள், அதனை எவ்வாறு சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய, முன்னெடுப்பதென திட்டமிட்டு, அதனை செயற்படுத்துவதற்கு தயாராக இருந்தார்கள் என்றால், நாட்டை திறப்பதில் பிரச்சினை இல்லை என்றார்.

அவ்வாறில்லை என்றால் நாட்டை திறப்பதால் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய ஏற்படும். நாட்டை திறப்பதனுடாக முன்னெடுக்கப்படும் சமூகப் பொருளாதார செயற்பாடுகளால் கொரோனா வைரஸ் நாட்டில் மீண்டும் பரவாதிருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# அது உண்மை...

அவர், நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மறைக்கும் முயற்சி

மக்களின் வரிப் பணத்தை செலவழித்து அவர்கள் அவ்வாறானதொரு பயணத்தை எதற்காக மேற்கொள்ளுகிறார்கள் என்றும் இதன்போது வினவினார். இது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் உண்மையை வெளிப்படுத்தாது சர்வசேத்துக்குச் சென்று மறைத்துக்கொள்ளும் முயற்சியாகும் என்றார்.

கொழும்பில் நேற்று (8) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அவர்களின் வத்திக்கான பயணத்தை நாம் பயனற்ற பயணமாகவே கருதுகிறோம். அதேபோல் அந்த வேலைத்திட்டத்தை தான் முழுமையாக நிராகரிப்பதுடன், அந்தப் பயணமானது சத்தியத்தை மூடிமறைக்கும் செயற்பாடாகவே கருதுகிறேன் என்றார்.

வெளிநாடுகளையும் பாப்பாண்டாவரையும் தவறாக வழிநடத்துவதற்கான முயற்சியாகவே இதனைப் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பொய் கூறி நாம் எதிர்பார்க்கும் நியாயத்தை எமக்கு வழங்காமல் அரசாங்கத்துக்கு இலாபம் கிடைக்கும் வகைளில் அனைத்தையும் செய்து நியாயத்தை மூடி மறைக்க இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் மற்றொரு துரும்பே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே இவர்களின் செயற்பாடானது, சர்வதேசத்திடம் எம்மை தள்ளும் செயற்பாடாகும். இவர்கள் செல்ல தீர்மானிப்பதால், எமது நிலை என்ன என்பது குறித்து சர்வதேசத்துக்கு அறிவிக்கவுள்ளோம். நாம் இப்போதே இது தொடர்பில் சர்வதேசத்திடம் அறிவித்துள்ளோம் . இந்த அரசாங்கம் விசாரணைகளை மூடிமறைக்க எடுக்கும் முயற்சி குறித்து சர்வதேத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

இந்த செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம். பக்கசார்பற்ற விசாரணையை முன்னெடுக்குமாறு, ஆனால் இந்த பிரச்சினையிலிருந்து விடுபடும் பதிலே எமக்கு கிடைத்தது. எனவே இந்த பிரச்சினையிலிருந்து விடுபட்டு சர்வதேசத்தையும் ஏமாற்ற எம்மால் இடமளிக்க முடியாது.

எனவே,அரசாங்கம் சர்வதேசத்திடம் செல்லுமாயின், நாமும் சர்வதேசத்திடம் செல்லுகிறோம். எமக்கு வேறு வழியில்லை சர்வதேசத்திடம் செல்லுவதைத் தவிர வேறு வழியில்லை.

73ஆண்டுகளாக இந்த நாட்டில் படிப்படியாக வளர்ச்சியடைந்த மோசமான அரசியல் முறை, தற்போது ஒரு தனிப்பட்ட நபரின் கைகளுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கியதன் மூலம் அந்த மோசமானமுறை பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த முறையை பலப்படுத்துவதன் மூலம் இந்த பிரச்சினைக்கு சாதாரண தீர்வு கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

# நீர் கட்டணத்துக்கு சலுகை காலம்

2024 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (08) இடம்பெற்றது இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தனார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்திலேயே இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர், நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது. சகலருக்கும் 2025 ஆம் ஆண்டில் சுத்தமான குடிநீர் கிடைப்பதற்கு வழிசமைக்கப்படும் என்றார்.

# குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றம்

இதன்போது, அ.தி.மு.க சபையில் இருந்து வெளி நடப்பு செய்திருந்தனர். “ஆதரிக்க மனமில்லாமல் அ.தி.மு.க.வினர் வெளியேறினர் என்பதே உண்மை என்று முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முன்னதாக எழுந்த கே.பி. முனுசாமி முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்த திட்டங்களை தமிழக அரசு முடக்குகிறது என்று சில கருத்துகளை கூறினார். (கே.பி.முனுசாமி பேச்சு அவைக் குறிப்பில் இருந்து சபாநாயகர் நீக்கினார்)

பூஜ்ய நேரத்தில் கேள்வி தான் கேட்க முடியும். விவாதம் பண்ண முடியாது. அரசியல் மேடை போன்று பேச முடியாது. பூஜ்ய நேரத்தில் பேசவேண்டும் என்றால் சபாநாயகரிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்றார் சபாநாயகர். இதன்போது எழுந்த எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, கே.பி. முனுசாமி பேச அனுமதிக்க வேண்டும் என கோரிநின்றார். என்னிடம் முன் அனுமதி பெறாமல் எப்படி பேச முடியும் என வினவிய சபாநாயகர் அப்படி பேசினால் அமைச்சரிடம் எப்படி பதில் கிடைக்கும். முடிந்த ஒரு பிரச்சினை பற்றி ஏன் பேச முயற்சிக்கிறீர்கள். இந்தப் பிரச்சினை குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெளிவாக பதில் கூறியுள்ளார். அதனால் பேச அனுமதிக்க முடியாது. அப்போது எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி இதை கண்டித்து வெளிநடப்பு செய்வதாக கூறி அவர் தலைமையில் அ.தி.மு.க உறுப்பினர்கள் வெளியில் சென்றனர். பின்னர் இது குறித்து மு.க.ஸ்டாலின் பேசியதாவது, குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க, எதிர்க்கட்சிகளுக்கு தைரியம் இல்லை. அதனால் வெளிநடப்பு செய்துள்ளார்கள். குடியுரிமை பெற மதம் அடிப்படை கிடையாது என்றார்.

# பிணை கேட்க முடியாது

போதைப்பொருள் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவருக்காக சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட மனுவை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம். மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

சிலாபம் பிரதேசத்தில் 67 கிலோகிராம் ஹேரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரியே அந்த திருத்தப்பட்ட மனு தாக்கல்

> **கொரோனா தொற்று நிலைமை அனைத்து கைதிகளுக்கும் பொதுவானது என சுட்டிக்காட்டிய நீதியரசர்கள் குழாம் அதனை விசேட காரணமாக கருத முடியாது**

செய்யப்பட்டிருந்தது.

கடந்த வருடம் கைது செய்யப்பட்ட அந்த நபர், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொரோனா தொற்று நிலைமை அனைத்து கைதிகளுக்கும் பொதுவானது என சுட்டிக்காட்டிய நீதியரசர்கள் குழாம் அதனை விசேட காரணமாக கருத முடியாது என தீர்ப்பளித்துள்ளனர்.

# சதித்திட்டம் ஊடாக கடிதம் வலிந்து திணிக்கப்பட்டது

நிறைய அனுபவம் வாய்ந்த வடமாகாண அவைத்தலைவர் சி.வீ. கே. சிவஞானம் வடமாகாண சபையை குழப்புவதில் பாரிய கவனம் செலுத்தினார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம் சாட்டியிருந்தார்.

அக்குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில், நேற்று (08) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லை என்றே ஆளுநருக்குக் கொடுத்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சபையைக் கலைக்குமாறு அதில் குறிப்பிடப்படவில்லை என்றார். முதலமைச்சர், அமைச்சர்களுக்கு எதிராக விசாரணைக் குழு ஒன்றை சபை நியமிக்க வேண்டும் என்ற முன்மொழிவைச் சமர்பித்தபோது இதன் பொருட்டு சபை உறுப்பினர் களைக் கொண்ட தெரிவுக் குழுவை நியமிக்க முடியுமே தவிர, முதலமைச்சர் கோரியபடி வெளியாட்கள் கொண்ட குழுவை நியமிப்பதை நிராகரித்ததே நான்தான் என்றார்.

முதலமைச்சர் தமக்குரிய சிறப்புரிமைக்கமைய அமைச்சர்களை நீக்கும்படி ஆளுநருக்கு சிபார்சு செய்யலாம் என்பதால் விசாரணைக்குழு தேவையற்றது என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது. அதனால் சுமார் ஒன்றரை நாள் விவாதத்தின் பின்பு முதலமைச்சர் தாமே ஒரு குழுவை நியமிக்கலாம் என்று நாம் கூறியதற்கு அமையவே விசாரணைக்குழு அவரால் நியமிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை சபையில் சமர்ப்பித்த பின் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் பொ.ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம் அளித்தார். முதலமைச்சர் அதனையும் பரிசீலித்து அவரது முடிவை இரண்டு நாள்களின் பின்பு தெரிவிக்கலாம் என்ற எனது கோரிக்கையை நிராகரித்து தமது தீர்மானித்தை வாசித்தார்.

இவ்வாறான நடவடிக்கை பற்றி எனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் பிற்பகல் 3 மணிக்கு கட்சித் தலைமையகத்தில் ஒரு கூட்டம் இருப்பதாகவும் அதில் கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

கட்சித் தலைமையத்துக்கு இரண்டு மணித்தியாலயங்களுக்கு பின்பு சென்றேன். முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆளுநருக்குச் சமர்ப்பிதற்கான கடிதம் கணினியில் தட்டச்சிடப்பட்டுக் கொண்டிருந்தது.

அது கட்சி உறுப்பினர்களின் முடிவென எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அதில் எனது பெயர் முதலில் இருந்தபோது அப்படிப் போட வேண்டாம். அது தவறு என பலமுறை வற்புறுத்தினேன். எனினும், அதனை நிராகரித்து எனது பெயரை முதலில் தட்டச்சாக்கிவிட்டார்கள். வேறு வழியின்றி கையொப்பமிட நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். இந்தக் கடிதத்தை ஆளுநரிடம் வழங்குவதற்கு என்னையும் அழைத்தார்கள். அப்படி நானும் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் எனது வாகனத்தில் புறப்படும்போது கமலேஸ்வவரன் அந்தக் கடிதக் கோவையை கொண்டு வந்து என்னிடம் தந்தார். அதை நான் ஏற்காமல் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தவர்களே கொடுக்க வேண்டும் எனக் கூறினேன். அவரும் அக்கோவையை எடுத்துச் சென்றார். பின்பு ஆளுநரைச் சந்திக்க மேல்மாடியில் உறுப்பினர்களும் ஊடகவியலாளர்களும் உட்சென்றபோது ஏற்பட்ட நெருக்கடிக்குள் அந்தக் கோவை எனது கையில் பலவந்தமாக திணிக்கப்பட்டது. அந்த இடத்தில் நின்று பிரச்சினைப் படுவதைத் தவிர்க்கும் பொருட்டு கடிதம் ஆளுநரிடம் சகல உறுப்பினர்கள் முன்னிலையில் கையளிக்க வேண்டியதாயிற்று என்றார்.

# இருப்பை பாதுகாத்து முன்னோக்கி நகர்வோம்

ஆசிரியர்கள் உட்பட அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். அதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தயாராகவே இருக்கின்றது என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (8) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பால் உற்பத்திய அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் என்ற போர்வையில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தின்கீழுள்ள தோட்டக் காணிகள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இத்துடன் இந்த நடவடிக்கை நின்றுவிடப்போவதில்லை. நாகஸ்தன்ன தோட்டம், கந்தலோயா தோட்டம், இரத்தினபுரியில் சில தோட்டங்களிலும் காணி அபகரிப்பு இடம்பெறவே போகின்றது. இது தொடர்பான தகவல்களையும், எச்சரிக்கைகளையும் நாம் ஏற்கெனவே விடுத்திருந்தோம். ஆனால் ஆளுங்கட்சியில் உள்ள மலையக பிரதிநிதிகள் மறுப்பு தெரிவித்தனர். பிரச்சினையை திசை திருப்பினர்.

தோட்டப்பகுதிகளில் உள்ள காணிகள் எமது மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையை நல்லாட்சியின்போது நாம் முன்னெடுத்தோம். தோட்டத் தொழிலாளர்களை சிறுத்தோட்ட உரிமையாளர்களாக ஆக்குவதற்கான திட்டத்தையும் வகுத்தோம்.

இத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்திருக்கலாம். அதனைவிடுத்து எம்மவர்களை தொடர்ந்தும் நாட்கூலிகளாக வைத்திருப்பதற்கும், அடிமைகளாக நடத்துவதற்குமே முயற்சி எடுக்கப்படுகின்றது. மாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை உள்ளிட்டவற்றில் எம்மவர்கள் வேலை செய்ய வேண்டும், அவர்கள் உரிமையாளர்களாக முடியாது என்பதே ஆளுந்தரப்பின் நோக்கம் என்றார்.

## அபகரிக்கப்படும் தோட்ட காணிகளின் முழு விவரம்

செப்டெம்பர் 6ஆம் திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் திரவப்பால் தேவையின் 40 சதவீதமானவை உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுவதுடன், ஏனையவற்றை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் 50 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படுகின்றன.

அதனால், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான யோசனைகள் இலங்கை முதலீட்டு சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை முதலீட்டுச் சபை, ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்களின் யோசனைகளைக் கோரியுள்ளதுடன், குறித்த சபையின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அந்த கருத்திட்ட யோசனைகளை சமர்ப்பித்தவர்களுக்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் தற்போது பயன்படுத்தாத காணிகள் மற்றும் பயன்பாட்டுக்கு உட்படுத்தாத ஏனைய அரச காணிகளை நவீன பால் பண்ணைகளாக அபிவிருத்தி செய்வதற்காக கீழ்க்குறிப்பிட்ட வகையில் 30 வருடங்கள் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

*H.B.K.I.R International Investment/ Access Agro (Pvt) Ltd* நிறுவனத்திற்கு 700 ஏக்கர்கள் மற்றும் *Pesara Logistics* நிறுவனத்திற்கு 60 ஏக்கர்களும் தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நிக்கவெரட்டிய பகுதியில் அமைந்துள்ள பண்ணையில் ஒதுக்கி வழங்கல்.

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கலபொடவத்த பெருந்தோட்டம் மற்றும் மவுன்ட் ஜின் தோட்டங்களில் 811 ஏக்கர்கள் *Farm's Pride (Pvt) Ltd* நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தெல்தொட்ட பெருந்தோட்டம் மற்றும் க்றேவ் வெலி தோட்டங்களில் முறையே, 200 ஏக்கர்கள் மற்றும் 150 ஏக்கர்களை *Hillside Agro (Pvt) Ltd* நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கொட்டுக்கச்சிய பண்ணையில் 250 ஏக்கர்களை *Gamma Pizzakraft (Pvt) Ltd* நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

என்றும் அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கர்ப்பம் தரிப்பதை ஒரு வருடம் பிற்போடவும்

இதனால், தம்பதியினர் விரும்பினால், குழந்தை பெற்றெடுப்பதை, ஒரு வருடத்திற்கு பிற்போடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 4,200 ஒக்ஸ் மீட்டர்கள் சிக்கின

அந்தப் பொருள்களை கொண்டு செல்வதற்கு வந்திருந்தவர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளமை தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட அவர், நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் செப்டெம்பர் 07 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாலைதீவுக்கு மணல் ஏற்றுமதி;

# ‘சாணக்கியன் நிரூபித்தால் பதவிகளை துறக்கத் தயார்’

### மஹிந்த அமரவீர அறிவிப்பு



மாலைதீவில் தீவு ஒன்றை அமைப்பதற்காக கிழக்கு மாகாணத்திலிருந்து மணல் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், அதில் சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாகவும் கூட்டமைப்பின் எம்.பி இரா.சாணக்கியன் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, இரா.சாணக்கியன் தனது குற்றச்சாட்டுகளை நிரூபித்தால், அமைச்சுப் பதவியில் மாத்திரமல்ல பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் தான் விலகுவதற்குத் தயார் எனவும் அவர் அதிரடியாக அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்று முன்தினம் அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சாணக்கியன் எம்.பி மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதலளித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர, நாட்டில் உள்ள சட்டத்திட்டங்களுக்கு அமைவாக நாட்டிலுள்ள எந்தவொரு வளங்களையும் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ய முடியாது என்றார்.

தீவு ஒன்றை அமைப்பதற்கு எந்தளவு மணல் தேவைப்படும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது. அவ்வாறு இருக்கின்ற நிலையில் மணல் ஏற்றுமதி செய்யப்படுமாக இருந்தால் கப்பல் ஊடாகவே அவை ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். கப்பல் ஊடாக இவற்றை சட்டவிரோதமாக செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மாலைதீவுக்கு 6 கியூப் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டது. இலங்கைக்கு சொந்தமான நிறுவனத்தின் ஊடாகவே இந்த மணல் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், சட்டவிரோதமாக இது மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

‘மத்திய வங்கியின் ஆளுநராக

# மீண்டும் கப்ரால்

### அறிவிப்பை விடுத்தது பொதுஜன பெரமுன



இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் விரைவில், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்க உள்ளதாக ஆளுங்கட்சிடயின் ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார், மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் விரைவில் நியமிக்கப்படுவார் எனத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் இராஜாங்க அமைச்சருமான அஜித் நிவாட் கப்ரால் விரைவில் மத்திய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்க உள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் நான் அவரிடம் வினவினேன்.

மத்திய வங்கியின் ஆளுநராக பெரும்பாலும் தான் பெறுப்பேற்க உள்ளதாக அஜித் நிவாட் கப்ரால் கூறியதாகவும், நாடு தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில் மத்திய வங்கியை சிறப்பாக நிர்வகிக்க வேண்டிய தேவை உள்ளது எனவும் தெரிவித்ததாக சொன்னார்.

நிதி முகாமைத்துவம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனவே அனுபமுள்ள அஜித் நிவாட் கப்ரால் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். அவர் ஆளுநராக விரைவில் பொறுப்பேற்பார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். ஜனாதிபதி, நிதி அமைச்சரின் கோரிக்கைக்கு அமையவே இராஜாங்க அமைச்சர் பதவியை அர்ப்பணிப்பு செய்துவிட்டு மத்திய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்க உள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை அஜித் நிவாட் கப்ராலின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி யாருக்கு வழங்கப்படுமென ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு ‘அது தொடர்பில் கட்சி தீர்மானிக்கும்’ என சிரித்தபடியே தெளிவான பதில் எதனையும் வழங்காது இடத்தைவிட்டு நழுவிச் சென்றார்.

தொழில்நுட்பக் குழுவில் தொடர்விலகல்;

# விலகியவர்களின் பங்களிப்பு தொடரும்



கொரோனா வைரஸ் தொழில்நுட்பக் குழுவில் இருந்து பேராசிரியர் நீலிகா மாலவிகே, விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம உள்ளிட்ட மூவர் விலகியிருந்தாலும், சுகாதாரத் துறைக்காக அவர்களின் பங்களிப்புகள் தொடர்ந்து காணப்படுமென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸின் ஒரு திரிபை கட்டுப்படுத்துவதற்கு பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் ஏனைய திரிபுகள் தொடர்ந்து உருவாகி வருவதாகவும், எனவே தற்போதைய நிலையை புரிந்துகொண்டு மக்கள் கொரோனா வைரஸுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்தார்.

உலக நாடுகள் பலவற்றில் தற்போது முடக்கம் இல்லை. குற்றச்சாட்டுகளை முன்வைப்பதைத் தவிர்த்து, கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ள அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்தார்.

குற்றச்சாட்டுகளை முன்வைத்துக்கொண்டிருக்கும் நேரம் இதுவல்ல. கொரோனா வைரஸ் தடுப்பூசிகளுக்கு பாரியளவில் கேள்விகள் எழுந்துள்ளன. தடுப்பூசிகள் செலுத்தும் சில நிலையங்களில் பாரிய சன நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.



ஜப்பானில் பதவி விலகினாலும்

# இங்கு நடக்காது

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனக் கூறி ஜப்பான் நாட்டுப் பிரதமர் பதவி விலகியிருந்தாலும், இலங்கையில் எவரும் இதுபோல பதவி விலகுவதில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அஜித் பி பெரேரா, கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் உள்ளிட்ட கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகள் அனைத்தும் அரசியல்வாதிகளால் முன்னெடுக்க ப்படக்கூடாது. மாறாக, இப்பணிகள் அனைத்தும் துறைசார் நிபுணர்களாலும், உலகில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொடர்பில் நன்கு அறிந்த விசேட நிபுணர்களாலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் ஒழிப்பு தொழில்நுட்ப குழுவில் இருந்து அரசியல்வாதிகளின் அழுத்தங்களால் தொடர்ந்து விசேட வைத்திய நிபுணர்கள் விலகி வருகிறார்கள். அரசியல்வாதிகளின் தலையீடுகளும் தொடர் அழுத்தங்களுமே விசேட வைத்திய நிபுணர்கள் விலகுவதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதற்காக அந்நாட்டுப் பிரதமர் பதவி விலகியுள்ளார். ஜப்பான் நாட்டுப் பிரதமர் பதவி விலகியிருந்தாலும், இலங்கையில் உள்ளவர்கள் அவ்வாறு ஒருபோதும் பதவி விலகப்போவதில்லை எனவும் தெரிவித்தார். வைத்தியர்கள், நாட்டு மக்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் தலையில் அந்தப் பொறுப்புகளைத் கட்டிவிட்டு, பதவிகளைத் தொடர்ந்து தக்கவைக்க முயற்சிக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

# சடலம் மீட்பு

முள்ளிப்பொத்தானை, சதாம் நகர் பகுதியைச் சேர்ந்த அலிபுல்லாஹ் அர்ஸான் (20வயது) என்பவரின் சடலம் திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலிருந்து நேற்று (08) மீட்கப்பட்டது.

வீட்டில் இருந்த இளைஞரை காணவில்லை எனத் தேடியபோது தொங்கிய நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணத்திற்கான காரணம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.


# ‘பொப்மாலி’யை கண்டால் அறிவிக்கவும்

மாலபே அல்லது பத்தரமுல்லையை முகவரிகளாகக் கொண்டிருக்கும் ‘பொப்மாலி’ என்றழைக்கப்படும் களுத்துறை சந்தித தாப்ருவே என்பவரை கண்டால், அறிவிக்குமாறு பொலிஸ் அறிவித்துள்ளது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் போதைப்பொருள் பணியகம், 071-8592727 அல்லது 011-2343333 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஒகஸ்ட் 31 ஆம் திகதியன்று, பேருவளை கடலில் வைத்து 288 கிலோ 644 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தின் பேரில் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போதைப்பொருளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு பிரதான காரணகர்த்தவாக ‘பொப்மாலி’




யே இருந்துள்ளார் என தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

41 வயதான அவர், நீண்டநாள் மீன்பிடியில் ஈடுபடுவதை தொழிலாக செய்கின்றார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலகிய விசேட வைத்தியர்களை

# மீண்டும் அழைக்கிறது பொதுஜன பெரமுன

கொரோனா ஒழிப்பு தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகிய விசேட வைத்தியர்கள் மீண்டும் அக்குழுவில் இணைந்துகொள்ள வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை செலுத்துவதில் இலங்கை கடந்த இருவாரங்களாக முன்னிலையில் உள்ளது. இதற்குரிய கௌரவம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குமே சேர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பைஸர் தடுப்பூசிகளை ஹம்பாந்தோட்டைக்கு வழங்குவதாகக் கூறுகிறார்கள்.

கடந்த பொதுத்தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குருநாகலிலும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஹம்பாந்தோட்டையிலும் போட்டியிட்டதற்காக பைசர் தடுப்பூசிகள் அந்த மாவட்டங்களுக்கு வழங்கப்படாது என்றார்.

பைசர் தடுப்பூசிகள் முதலில் கிழக்கு மாகாணத்துக்கே வழங்கப்பட்டது. அதன்பின்னரே தற்போது ஹம்பாந்தோட்டைக்கு வழங்கப்படுகிறது. அரசியலை இலக்கு வைத்து செலுத்தும் பணிகள் முன்னெடுப்படவில்லை. மாறாக, சுகாதார நிபுணர்களின் அறிவுரைகளுக்கு அமையவே தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

“இரண்டாம் மொழி

# பயிற்றுவிப்பாளர்களை அங்கிகரியுங்கள்”

### நிரந்தரத் தீர்வை வழங்குமாறு கோருகிறார் ஜனகன்



மாணவர்களுக்கு இரண்டாம் மொழி பயிற்றுவிப்பாளர்கள் என்ற உரிய அங்கிகாரம் கிடைக்க வேண்டும். அதை வழங்குவதாகக் கூறி இருக்கும் தேசிய மொழிகள் கற்கை நிலையம் இவ்விடயத்தில் நிரந்தர தீர்வு கொடுக்க வேண்டும். இவ்வாறு தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவர் கலாநிதி வி.ஜனகன் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இங்கு தனிப்பட்ட எந்த அரசியல் தலையீடுகளும் இருக்கக் கூடாது என்பதில் அரசியல் கடந்து தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் இந்த மாணவர்களுக்காக எனது குரல் எப்போதும் ஒலிக்கும்.

கடந்த நல்லாட்சி காலத்தில் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு இந்து சமய விவகார அமைச்சால் தேசிய மொழிகள் கற்கை நிலையத்தின் ஊடாக 1,300 இரண்டாம் மொழி பயிற்றுவிப்பாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன. பின்னர் அந்நியமனங்கள் இரண்டு வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் நானும் இந்த மாணவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல தடவைகள் தேசிய மொழிகள் கற்கை நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பிரசாந்த் ஹேரத்திடம் இவ்விடத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் என்ற அடிப்படையில் இந்த மாணவர்களுக்கு ஏதாவதொரு ரீதியில் விடிவை பெற்றுக் கொடுங்கள் என வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

தற்போது தேசிய மொழிகள் கற்கை நிறுவனத்தின் ஊடாக இந்த மாணவர்களுக்கு குறுகிய கால பயிற்சியை வழங்கி சான்றிதழ்களை வழங்குவதாக தேசிய மொழிகள் கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதி அளித்திருப்பதாகவும் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன். முதற்கண் எனதும் மாணவர்களினதும் வேண்டுகோளை அரசியல் கடந்து செவிசாய்த்த அந்த நிறுவனத்தின் தவிசாளருக்கும் விசேடமாக குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும் தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

யாழில் அதிக விலையில் விற்பனை

# மூன்று வாரங்களில் 53 வழக்குகள் தாக்கல்

**என்.ராஜ்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக விலைக்கு பொருள் விற்றல், காலவதியான பொருள் விற்றல் போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் கடந்த மூன்று வாரங்களுக்குள் 53 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட செயலாளர் க. மகேசன் தெரிவித்தார்

நேற்று முன்தினம் (07) மட்டும் எட்டு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் தொடர்ச்சியாக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையால் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அதனுடன் இணைந்த வகையிலே நிறுத்தல், அளவைகள் திணைக்களமும் தங்களுடைய பணியாளர்களை களப் பணியில் ஈடுபடுத்தி பரிசோதனை நடவடிக்கை முன்னெடுத்து வருகின்றது.

மேலும், நடைபாதை வியாபார நிலையங்களும் நடமாடும் விற்பனை வண்டிகளும் பரிசோதனை செய்யப்படவுள்ளன. எனவே, வியாபாரிகள் மிகவும் விழிப்புணர்வுடன் பொதுமக்களுக்கு சகாய விலையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். அதிக விலைக்கு விற்பனை செய்து பிடிபட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார்.

அத்தோடு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் இணைந்த வகையில், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 5 பட்டதாரி பயிலுநர்களுடன் இணைந்து இப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு நாளாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

குறிப்பாக சீனி, அரிசி, அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பான விற்பனை நிலை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. தினத்தில் மிகவும் இறுக்கமான முறையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.


## அறிவித்தல்

**ஹரிச்சந்திரா மில்ஸ் பிஎல்ஸி – PQ 225**

**அதிவிசேட பொதுக்கூட்டம்**

கீழ்க்காணும் இந்த அறிவித்தலின் பிரகாரம், ஹரிச்சந்திரா மில்ஸ் பிஎல்ஸியின் (கம்பனி) வருடாந்த பொதுக் கூட்டம் (“AGM”) 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு, நிகர்நிலைத் தளத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டம் தொடர்பான விவரங்கள், நிகழ்ச்சி நிரல் அத்துடன், பதிலாளுக்கானதும் மற்றும் பதிவு செய்வதற்கானதுமான படிவத்தை, (https://www.cse.lk/pages/company -profile/company-profile. component .html? symbol=HARI.N0000) என்ற கொழும்பு பங்குச் சந்தையின் இணையத் தளத்தில் அல்லது கம்பனி இணையத் தளத்தில் (www.harischandramilla.com) பெற்றுக்கொள்ள முடியும்.

பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள், தயவுசெய்து தாமதமின்றி, மேற்குறித்த இணையத்தளங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து coporateservices@corporateservices.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டம் ஆரம்பமாகும் குறித்த நேரத்துக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஹரிச்சந்திரா மில்ஸ் பிஎல்ஸி யின் இயக்குநர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம்
கோர்ப்பிரேட் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள் / பதிவாளர்கள்
2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதியின் படி

இனச் சுத்திகரிப்பு பற்றிப் பேசுவோர் படுகொலைகளை

# நினைவில் கொள்க

## தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவர் தெரிவிப்பு

கே.எல்.ரி.யுதாஜித்



இனச் சுத்திகரிப்பு பற்றிப் பேசுவோர் கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றியும் நினைவில் கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவருமான இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய அரசியல் நிலைவரம் தொடர்பில் நேற்றைய (8) தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர், அம்மக்களின் உணர்வுகளை மதித்து, தங்கள் கருத்துகளை வெளியிட வேண்டும். தாம் யதார்த்தமாகப் பேசுகின்றோம் என்ற எண்ணப்பாட்டில், தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டும் முகமாகச் செயற்படுதல் கூடாது. அனைத்து இனங்களையும் மதிக்க வேண்டும் என்பது உண்மையான விடயமே! ஆனால், எம்மின மக்களைக் காயப்படுத்தி, அதன் மூலம் மாற்றுச் சமூகத்தைத் திருப்திப்படுத்த எண்ணுவது எந்த வகையிலும் நியாயமாகாது. நாம் வடக்கு கிழக்குப் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள். எமது கருத்துகள் இரண்டு பிராந்தியங்களையும் சார்ந்தே இருக்க வேண்டும். வடக்கில் இடம்பெற்ற இனச்சுத்திகரிப்பு பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கும் எம்மவர்கள், கிழக்கில் மாற்றுச் சமூகத்தால் இடம்பெற்ற இனஅழிப்பு தொடர்பில் ஏன் கருத்திட மறுக்கின்றார்கள் என்றார்.

வடமாகாணத்தில் கொரோனா தாண்டவம்

# ஒரு வாரத்துக்குள் 106 பேர் மரணம்

எம்.றொசாந்த், க. அகரன்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் 4 ஆயிரத்து 83 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் துறையின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மரணங்களுடன் சேர்த்து, வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 515ஆக உயர்வடைந்துள்ளது.

செப்டெம்பர் 7ஆம் திகதி 569 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் வடக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 246 பேரும் வவுனியாவில் 160 பேரும் கிளிநொச்சியில் 99 பேரும் முல்லைத்தீவில் 39 பேரும் மன்னாரில் 31 பேரும் அடங்குகின்றனர்.

மாகாணத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருப்போரில் 22 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். வவுனியா மாவட்டத்தில் மட்டும் 16 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 5 பேரும் முல்லைத்தீவில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

செப்டெம்பர் மாதத்தின் முதல் ஏழு நாள்களில் வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 83 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1,724 தொற்றாளர்களும் வவுனியாவில் 1,056 தொற்றாளர்களும் கிளிநொச்சியில் 889 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 275 தொற்றாளர்களும் மன்னாரில் 139 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் வவுனியா மாவட்டத்தில் 45 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 43 பேரும் கிளிநொச்சியில் 9 பேரும் முல்லைத்தீவில் 8 பேரும் மன்னாரில் ஒருவரும் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில், 2020 மார்ச் தொடக்கம் டிசெம்பர் வரை வவுனியா மாவட்டத்தில் ஒருவர் மட்டுமே கொரோனா தொற்றால் உயிரிழந்தார். எனினும், செப்டெம்பர் 7ஆம் திகதிவரை 515 பேர் உயிரிழந்துள்ளனர். ஓகஸ்ட் மாதத்தில் அதிகப்படியாக 228 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 303 பேரும் வவுனியா மாவட்டத்தில் 119 பேரும் கிளிநொச்சியில் 45 பேரும் முல்லைத்தீவில் 28 பேரும் மன்னாரில் 20 பேரும் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் (07) வரையிலும் 30 ஆயிரத்து 912 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 474 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 635 பேரும் வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 788 பேரும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 192 பேரும் மன்னாரில் ஆயிரத்து 823 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூன்று நாள்களாக எரிந்து கொண்டிருக்கும்

# சவளக்கடை நாணல் காடுகள்

பாருக் ஷிஹான்



சம்மாந்துறை, சவளக்கடை பொலிஸ் எல்லை பகுதிகளில் உள்ள நாணல் காடுகள் கடந்த 3 தினங்களாக எரிந்து கொண்டு இருக்கின்றன. இதனால் குறித்த பகுதியை சூழவுள்ள சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மருதமுனை, பெரியநீலாவணை பகுதிகளில் எரிந்த நாணல் கீற்றின் சாம்பல் துகள்கள் விழுந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. நாணல் மூங்கில் சருகு எரிந்து நாசமாகி வருகின்றன. எனினும், அருகே எவ்வித குடியிருப்புகளும் இல்லாததால், எவ்வித உயிர்ச் சேதமோ பொருட் சேதமோ ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அதிகமான உயிரினங்கள் இறந்துள்ளன.

இப்பகுதியில் வீசுகின்ற கடும் காற்றால், குறித்த நாணல் காடுகள் உராய்வுக்கு உட்பட்டு எரிந்திருக்கலாம் என, அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அத்துடன், இனந்தெரியாதவர்களால் பறவை, மிருக வேட்டை ஆகியவற்றுக்காகவும் குறித்த நாணல் காடுகள் எரிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா

# ஆறு நாள்களில் 28 பேர் மரணம்



திருகோணமலை மாவட்டத்தில் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆறாம் திகதி வரை 28 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளதுடன், 846 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது. திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தால் திங்கட்கிழமை (06)வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய, திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 10,661 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 276 மரணங்கள் சம்பவித்துள்ளன.

அத்துடன், 156 கர்ப்பிணிகள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான 164 சிறார்களும் 65 வயதுக்கு மேற்பட்ட 427 பேரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், உளநலம் பாதிக்கப்பட்ட 9 பேரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதேச வைத்தியர்களுக்கு

# நியமனங்களை வழங்குங்கள்

## வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகள் கோரிக்கை

ஹஸ்பர் ஏ ஹலீம்

கொரோனாவை சுதேச வைத்தியத்தின் மூலம் கட்டுப்படுத்த, தகுதி வாய்ந்த 1,000 வைத்தியர்கள் வேலைவாய்ப்பின்றி வீட்டில் இருக்கிறார்கள் என, வேலைவாய்ப்பற்ற சித்தவைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹபில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், மேலும் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது:

ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய துறைகளில் பட்டம் பெற்று, உள்ளக பயிற்சிகளை நிறைவு செய்த 1,000 வைத்தியர்கள், 2017 ஆம் ஆண்டில் இருந்து அரச நியமனம் கிடைக்காமல், வேலைவாய்ப்பற்ற நிலையில் இருக்கின்றனர்.

தற்போதைய கொரோனா இடர் காலத்தைக் கருத்தில் கொண்டு, சுகாதார துறையை வலுப்படுத்த, வேலையற்ற சுதேச வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கி, கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேவையாற்ற வழி செய்வதே அரசின் புத்திசாலித்தனமானதும் ஆரோக்கியமானதுமான முடிவாகும். மேலும், இது தொடர்பாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியுடன் பல முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. ஜனாதிபதி, பிரதம மந்திரி ஆகியோரின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மாறாக, அலோபதி துறையில் உள்ளக பயிற்சியை தொடங்காத மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பது மிக்க வேதனை அளிக்கிறது.

நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இலவச கல்வியை கற்று, சுகாதார துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களாகிய எமக்கு, உடனடியாக அரச நியமனம் வழங்கி, நாட்டு மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளுக்கான

# யானைதடுப்பு வேலிகள் தயார்

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடத்திற்குள் 107.5 கிலோமீட்டர் தூரத்துக்கு, யானை தடுப்பு வேலிகள் அமைத்து, யானைகள் கிராமங்களுக்குள் வருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக கிரான், வாகரை, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த வேலிகள் அமைப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிரான் பிரதேசத்தில் 73 கிலோமீட்டர் தூரவேலியும் வாகரை பிரதேசத்தில் 18.5 கிலோமீட்டர் தூர வேலியும் செங்கலடி பிரதேசத்தில் 16 கிலோமீட்டர் தூர வேலியும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மொத்தத்தில் 83 கிலோமீட்டர் தூர வேலைகளுக்கான கேள்வி கோரப்பட்டு, உரிய ஒப்பந்தக்காரர்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வருட இறுதிக்குள் அதனைப் பூர்த்தி செய்யநடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர் மரணம்

க.விஜயரெத்தினம்



மட்டக்களப்பு, வாழைச்சேனையை பிறப்பிடமாகவும் கல்லடி, நொச்சிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தமிழ் ஆசிரியரான ஆரியநந்தா, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளார்.

வாழைச்சேனையில் 1969.03.14 பிறந்த இவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிசிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் ( 07) மரணமடைந்தார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இவர், இறுதியாகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் ஒருவர் பலி; ஒருவர் கவலைக்கிடம்



க. அகரன்

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் நேற்று (08) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த மேலுமொருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த கப்ரக வாகனம், கனகராயன்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது, யாழில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியது.

கப் வாகனத்தில் பயணித்த 50 வயதான நபர் மரணமடைந்தார். அதன் சாரதி கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவ இடதுக்குச் சென்ற கனகராயன்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னாரில் 22 கொரோனா மரணங்கள் பதிவாகின



எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களிலும் இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அம்மரணங்களுடன் சேர்த்து மன்னார் மாவட்டத்தில் 22 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (07) மரணமடைந்த 72 வயதான பெண், தடுப்பூசி எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. 78 வயதுடைய பெண்ணொருவர் நேற்றுக்காலை (08) மரணமடைந்தார். அவர், தனக்கான முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டிருந்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (7) மன்னார் மாவட்டத்தில் புதிதாக 31 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

1,806 கொரோனா தொற்றாளர்கள் இந்த வருடமும் இதுவரை 1,823 கொரோனா தொற்றாளர்களும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் இன்றைய தினம் வியாழக்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்,முருங்கன் டோன் பொஸ்கோ தொழில் பயிற்சி நிலையம்,மற்றும் இரணை இலுப்பைக்குளம் ம.வி பாடசாலை ஆகியவற்றில் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை (9) மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, நானாட்டான் டிலாசார் பாடசாலை, மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்,மறிச்சிக்கட்டி அல் ஜெசிரா பாடசாலை, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு ஒத்திவைப்பு

எம்.றொசாந்த்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் 16,17, 18 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்தது. தற்போதைய கொரோனா பெருந்தொற்று நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, ஒக்டோபர் மாதம் 7,8,9 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப்பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக் குழு துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று (08) கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 07 ஆம் திகதி முதல் 09 திகதி வரை யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்துவது எனத் தீர்மானித்துள்ளது. எனினும் சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழாவைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விநியோக சிக்கல்களால்

# மரக்கறி விலைகள் அதிகரிப்பு

ரஞ்சித் ராஜபக்ஸ



பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலை குறைவாக காணப்பட்டாலும் அவை நுகர்வோருக்கு அதிக விலைக்கு விற்கப்படுவதாக, அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கத்தின் தலைவர், அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று (8) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மரக்கறிகளை விநியோகிக்கும் முறையில் சில சிக்கல்கள் காணப்படுவதால், இவ்வாறு நுகர்வோருக்கு அதிக விலைக்கு விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றார்.

அத்துடன், தற்போது மரக்கறி விற்பனைத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் இந்த மரக்கறி விற்பனையில் ஈடுபடுவதில்லை என்றும் மாறாக தொழில்வாய்ப்பை இழந்தவர்களே, இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

பொருளாதார மத்திய நிலையங்களை மூடுவதால் வியாபாரிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நட்டமே ஏற்படுகிறது. எனவே, மொத்த வர்த்தகர்களுக்கு பொருளாதார மத்திய நிலையங்களை திறப்பது சிறந்தது என்பதே தமது சங்கத்தின் நிலைப்பாடு என்றார்.

மஸ்கெலியாவில் தடுப்பூசி செலுத்தல்

# 85 சதவீதம் பூர்த்தி

கே.சுந்தரலிங்கம்

மஸ்கெலியா பொது சுகாதார வைத்திய அதிகார பிரிவில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு 85 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, மஸ்கெலியா பொதுச் சுகாதார வைத்திய அதிகார பிரிவின், வைத்திய அதிகாரி வைத்தியர் துரைசாமிபிள்ளை சந்திரராஜன் தெரிவித்தார்.

மஸ்கெலியா பொது சுகாதார பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி



செலுத்தும் வேலைத்திட்டதில் முதல் இரண்டு டோஸ்களும் சகலருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

அதே நேரம் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை, தற்போது மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய, 30 வயதுக்கு மேற்பட்ட 35,600 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களுக்கும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதனை உடனடியாக செய்து முடிக்க காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

.

இதேவேளை, மஸ்கெலியா பொதுச் சுகாதார பிரிவில், இதுவரை சுமார் 40 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதென தெரிவித்த அவர், தடுப்பூசி செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் 15 சதவீதத்தினரும் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டு, தங்களது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் தடுப்பூசி செலுத்துவதன் மூலம் மாத்திரமே இந்தத் தொற்றுப் பரவலை தடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

# மலையகத்தில் பொலித்தீன் பைகளில் பால்மா விற்பனை

சுதத். எச்.எம்.ஹேவா

நாட்டின் பல இடங்களிலும் பால்மாவுக்கு தட்டுப்பாடு தொடர்ந்து நிலவிவரும் நிலையில், மலையகத்தின் சில நகரங்களில் ஐஸ்கிறீம் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் பால்மா வகைகளை விற்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

பால்மா தட்டுப்பாட்டை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, குறித்த ஐஸ்கீறிம் தயாரிப்புக்கான பால்மாவை சாதாரண பொலித்தின் பைகளில் பொதி செய்து, விற்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலித்தீன் பைகளில் உற்பத்தி திகதியோ, விலையோ, குறிப்பாக எந்த வகையான பால்மா என்பது கூட குறிப்பிடப்படுவதில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.





# ஹட்டனில்





தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் உள்ள நிலையில், வாகன போக்குவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் ஹட்டனில் தீவிர சோதனைகளை முன்னெடுத்துள்ளனர்.

(படங்களும் தகவலும் எஸ். சுந்தரலிங்கம் )







மொனராகலை மாவட்டத்தில்

# 45 வெற்றிடம்

சுமணசிறி குணதிலக

மொனராகலை மாவட்டத்தில் உள்ள 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தர் வெற்றிடம் நிலவுவதாக, மொனராகலை மேலதிக மாவட்ட அதிபர், சந்தன லொக்குஹேவகே தெரிவித்துள்ளார்.

குறித்த வெற்றிடம் நிலவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பதில் கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் 90 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள மக்கள், கிராம உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.





புரடொக்ட் அமைப்பின் உறுப்பினர்களுக்கு

# நிதி அன்பளிப்பு

சுதத்.எச்.எம்.ஹேவா

கொரோனா பரவலால் அமல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட பெருந்தோட்டங்களைச் சேர்ந்த புரடொக்ட் அமைப்பின் உறுப்பினர்களுக்கு நேற்று (8) நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

நாடு முடக்கப்பட்டுள்ளதால், பெருந்தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் தவிர்ந்த அன்றாட தொழில்களில் ஈடுபடுபவர்கள், ஓட்டோ செலுத்துபவர்கள் உள்ளிட்டவர்கள் பாரிய பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவித்த புரடொக்ட் அமைப்பின் பணிப்பாளர் கல்ப மதுரங்க, அரசாங்கத்தின் 2,000 ரூபாய் கொடுப்பனவும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றார்.

எனவே, தமது அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு, இந்த நிதியுதவி செய்யப்படுவதாகவும் தமத உறுப்பினர்களின் உறுப்புரிமைக் கட்டணத்தில் சேகரிக்கப்பட்ட நிதியே இவ்வாறு வழங்கி வைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபானத்துடன் கைதுசெய்யப்பட்டவர்

# பிணையில் விடுதலை

ரஞ்சித் ராஜபக்ஷ



தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில், மலையகத்தில் குடியிருப்புகள், மாட்டுகொட்டகைகள் என பல இடங்களில் சட்டவிரோத மதுபான உற்பத்தி முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கமைய, தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகொடை, மடக்கும்புர தோட்டத்தில், குடியிருப்புகளில் சட்டவிரோத மதுபானத்தை தயாரித்து, அதிக விலைக்கு விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவர், உபகரணங்களுடன் நேற்று (8) தலவாக்கலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கைதுசெய்த போது, அவரிடமிருந்து 1,70,250 லீற்றல் கோடா மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக நுவரெலியா நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாதுகாப்பு வேலியற்ற வீதி

மொஹொமட் ஆஸிக்



மடவளை, தெல்தெனிய பிரதான வீதியின், மடவளை முச்சந்திக்கு அண்மையில் உள்ள வீதியின் இருமருங்கும் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பாதசாரிகள் மற்றும் அவ்வழியால் பயணிப்போர் ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சுமார் 20 அடி பள்ளமான குறித்த பகுதியில், எதுவித பாதுகாப்பு வேலியும் போடப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாயால் வடை சுடுபவர்களே

# இ.தொ.காவை விமர்சிக்கின்றனர்

நிலமேகம் பிரசாந்த்

மலையக அரசியலில் இ.தொ.காவை பற்றி குறிப்பிட்டாலோ அல்லது இ.தொ.காவைவிமர்ச்சித்தாலோ மாத்திரமே, எதிர்கால அரசியல் உண்டு என்பதால், மாற்றுக் கட்சியினர் தற்போது விமர்சனம் எனும் ஆயுதத்தை கையிலெடுத்துள்ளனர் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபசெயலாளர் சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இதற்கு இ.தொ. காவோ, இ.தொ.காவின் உறுப்பினர்களோ ஒரு போதும் தளரப்போவதில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

வெறுமனே விமர்சன அரசியலை மாற்றுக்கட்சி சகாக்கள் முன்னெடுத்து வருகின்றனர். காரணம் மலையகத்தில் நிலையானதும் ஸ்திரமான அமைப்பு இ.தொ. காவே; அதனால் இன்றும் மக்கள் இ.தொ.காவோடு இருக்கின்றனர்.



நல்லாட்சி அரசாங்கத்தின் போது, வீடுகள் கட்டப்பட்டதாக கொக்கரிப்பவர்கள் அவ்வீட்டுத்திட்டம் என்னவாகியுள்ளது எனச் சற்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை. வெறுமேனே நான்கு சுவர்களை வைத்து கூரை போட்டு, எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்காமல், வீடு என மக்களுக்கு கொடுத்துள்ளனர். அவர்கள் கைவிட்ட குறைகளை இ.தொ.கா மாத்திரமே முன்னின்று தற்போது செய்து வருகின்றது என்றார்.

நுவரெலியா மாவட்ட விவசாயிகள் பலர்

# “விவசாயத்தை கைவிட்டுள்ளனர்”

## உதயகுமார் எம்.பி தெரிவிப்பு

சேதனப் பசளை என்ற போர்வையில் நாட்டில் ஒட்டுமொத்த விவசாயிகளையும் இந்த அரசாங்கம் நடுத்தெருவுக்கு கொண்டு வந்துள்ளது என தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார், சேதனப் பசளை விவசாயம் செய்யப்படுவது மிகவும் ஆரோக்கியமான திட்டம் தான். ஆனால் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தி விவசாயிகளை சிரமத்திற்கு உள்ளாக்காமல் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (7) இடம்பெற்ற விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திடீரென இரசாயன உர இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. சேதனப் பசளை பயன்பாட்டை அரசாங்கம் வலியுறுத்துகிறது.



ஆனாலும், அதற்கான முறையான திட்டம் ஒன்று முன்வைக்கப்படாமையால் விவசாயிகள் பலர், நிலத்தில் பயிர்களை நட்டு, அதற்கு உயிர் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, நுவரெலியா மாவட்டத்தில் சிறியளவு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் சாதாரண விவசாயிகள் முதல் மரக்கறி மற்றும் கிழங்கு உள்ளிட்ட ஏனைய பெரியளவு விவசாயிகளும் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

சேதனப்பசளை முறையாக விநியோகிக்கப்படுவதற்கு முன்னர், பயிரிடப்பட்டுள்ள பயிர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேதன பசளை பயன்பாடு சிறந்த திட்டம். அதற்கு நாம் எதிர்ப்பு கிடையாது. ஆனால் ‘வெறுங்கையில் முழம்போட முடியாது’ என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றார்.

# இலாபநோக்க ‘கோட்டா’ அரசியல் முடிவுகள் அழிவுக்கே வித்திடும்

கணக்கு வழக்குகளில் ஏதாவது திருகுதாளம் செய்துவிட்டால், ‘கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாமே சரியாகிவிடும்’ எனக் கூறுவதைக் கேள்விப்பட்டு இருக்கின்றோம். அதைப் போலதான் தடுப்பூசி கணக்குகளும் உள்ளன என்பது, அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படும் விமர்சனங்களில் இருந்தே அம்பலமாகியுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட, நன்கொடையாக வழங்கப்பட்ட தடுப்பூசிகளில் ஒரேயொரு வகையான தடுப்பூசி மட்டுமே இல்லை; பலவகையான தடுப்பூசிகள் உள்ளன. அவற்றில் சில, அமைச்சர்களுக்கு ‘கோட்டா முறை’யில் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க விரல் நீட்டியுள்ளார்.

ஃபைசர் தடுப்பூசி செலுத்தப்படுவதும் கண்டி மாவட்டத்தில் ஒருசில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மட்டுமே ஸ்புட்னிக் வீ தடுப்பூசி செலுத்தப்பட்டதும் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கும் நிலையில், ஆளும் தரப்பினருக்கு ‘தடுப்பூசி கோட்டா’ கிடைக்கின்றதோ என்பதை சந்தேகத்துக்கிடமின்றி உண்மையாக்கியுள்ளது.

ஆனால், பரவலாகச் செலுத்தப்படும் சினோர்ஃபாம், மொடனா, அஸ்டாசெனிக்கா உள்ளிட்ட தடுப்பூசிகளைத் தவிர ஏனைய தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டவர்களில் பலர் முதலாவது டோஸுடன் நிற்கின்றனர். முதலாவது, தடுப்பூசி செலுத்தப்பட்ட ஒருமாதத்துக்குள் இரண்டாவது தடுப்பூசியையும் செலுத்திக்கொள்வதன் ஊடாகவே, நோயெதிர்ப்பு சக்தி உருவாகுமென பரவலாகக் கூறப்படுகின்றது.

ஆனால், கண்டி மாவட்டத்தில் அது தலைகீழாகவே நிற்கிறது. நாட்டில் முதலாவது தடுப்பூசியை இராணுவ வீரர் செலுத்திக்கொண்டு, சகலருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இராணுவத்தளபதி, முக்கிய அரசியல்வாதிகளில் சிலர் தடுப்பூசியை செலுத்தி, புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் உலாவவிட்டிருந்தனர்.

ஆனாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கிய புள்ளிகளில் பலரும், எவ்வகையான தடுப்பூசியை செலுத்திக்கொண்டனர் என்பது, கண்களை மூடிக் கொண்டு பூனை பால்குடித்ததைப் போலவே உள்ளது.

இவ்வாறானவர்கள், ‘தடுப்பூசி கோட்டா’வின் ஊடாக, தங்களுக்குக் கிடைத்தவற்றில் செலுத்திக்கொண்டனரா? என்ற நியாயமான சந்தேகமும் எழுந்துள்ளது. பொது எதிரியான கொவிட்-19 நோய் ஒழிப்பின் போது, அரசியல் இலாபநோக்கத்துடன் செயற்படாமல் இருக்கவேண்டுமென எதிரணியைப் பார்த்து வசைப்பாடிய ஆளும் தரப்பினர், இப்படி தடுப்பூசி கோட்டாவுக்குள் மறைந்திருப்பது வேதனையானது.

அதுவும் ஒருவகையான அரசியல் இலாப நோக்கானது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். இதனூடாக அழிவுக்கான பாதையைத் தங்களுக்குத் தாங்களாகவே வெட்டிக்கொள்கின்றனர். மக்களிடத்தில் கரிசனையை கொண்ட எவருமே, இலாபத்தை நோக்காகக் கொண்டு செயற்படமாட்டார்கள்.

நாடும் மக்களும் இக்கட்டான நிலையில் இருக்கையில், எவற்றை வைத்தேனும் இலாபத்தை ஈட்டிக்கொள்ள நினைக்கக்கூடாது. ஏனெனில், கொரோனா தொற்றுக்காலத்தில் சாதாரணமாக மரணிப்போருக்கும் இறுதி ஊர்வலம் நிச்சயமற்றதாய் உள்ளது.

ஆகையால், வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கும் மக்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் கருதிற்கொண்டு, அரசியல் இலாபமற்ற வகையில் முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும்போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளிடம் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக, எதிரிகளுடன் சுமூக உறவைப் பேணுவது, வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புத்தான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களையும் பாசத்துடன் நோக்கினால், அவை உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள்; அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### சம்பந்தன் இனியும்

# கூட்டமைப்பின் தலைவரா?



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தொடர்ந்தும் ‘கூட்டமைப்பின் தலைவர்’ என்கிற தகுதியோடு இருக்கிறாரா? என்கிற கேள்வி எழுந்திருக்கின்றது.

கூட்டமைப்பில் தற்போது அங்கம் வகிக்கும் மூன்று பங்காளிக் கட்சிகளில், தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ), தமிழ் ஈழ விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியவை, சம்பந்தனை நிராகரித்துக் கொண்டு, சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணி ஒன்றுக்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது கூட்டத் தொடரை முன்வைத்து, கூட்டமைப்பு என்ற அடையாளத்தைத் தவிர்த்துக் கொண்டு, டெலோவும் புளொட்டும் இன்னும் சில கட்சிகளும் இணைந்து அனுப்பியுள்ள கடிதத்தின் மூலம், அது அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரை, தமிழ்த் தேசிய கட்சிகளும் தரப்புகளும், தமிழ் மக்களுக்கான நீதிக் கோரிக்கைகளை அடைவதற்கான வாய்ப்புகளாகப் பயன்படுத்துவதைக் காட்டிலும், தங்களது தனிப்பட்டதும் கட்சி சார் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே பயன்படுத்தி வந்திருக்கின்றன. இம்முறையும் அவ்வாறான காட்சிகளே அரங்கேறுகின்றன.

தமிழ்த் தேசிய கட்சிகளிடம் இருந்து, இம்முறை மூன்று கடிதங்கள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. கூட்டமைப்பின் தலைவர் எனும் அடையாளத்தோடு சம்பந்தனால் ஒரு கடிதமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இன்னொரு கடிதமும் டெலோவின் அழைப்பின் பேரில் புளொட், விக்னேஸ்வரன் உள்ளிட்ட கூட்டினால் மற்றொரு கடிதமும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இலங்கை தொடர்பில், இந்தக் கூட்டத்தொடரில் வாய்மூல அறிக்கையே சமர்ப்பிக்கப்படவுள்ள சூழலில், அது தொடர்பிலான அறிக்கையை, மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஏற்கெனவே தயாரித்து முடித்துவிட்டது. ஆனாலும், தங்களது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக, தமிழ்த் தேசிய கட்சிகள் கடிதங்களை அனுப்பி நாடகம் ஆடுகின்றன.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேரும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்திட்ட கடிதமொன்றை அனுப்புவது தொடர்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரனிடம் அறிவித்து, அந்தக் கடிதத்தைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

அந்த விடயம், டெலோவின் அழைப்பின் நிமித்தம் கூடிய கட்சிகளிடமும் உதிரிகளிடமும் இணைய வழி கலந்துரையாடலொன்றின் போது அறிவிக்கப்பட்டதாக சுமந்திரன் கூறுகிறார். சம்பந்தனின் கடிதத்தின் பிரதிகள், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு, கருத்துகள் கேட்கப்பட்டு, அதன் பின்னர் கையெழுத்துகள் பெறப்படுவதற்கு முன்னராகவே, அவசர அவசரமாக டெலோவின் அழைப்பில் கூடிய குழுவினர், இன்னொரு கடிதத்தை அனுப்பி இருக்கிறார்கள்.

டெலோவின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் புளொட்டின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரைத் தவிர்ந்தால், கூட்டப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடையாளத்தோடு ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் மாத்திரம் கடிதத்தில் கையெழுத்திட முடியும். அப்படி நடந்தால், தமிழரசுக் கட்சியின் கடிதம் எனும் அடையாளத்தைப் பெறும் என்பதால் அது தவிர்க்கப்பட்டு இருக்கின்றது. அதனாலேயே, சம்பந்தனின் கூட்டமைப்பின் தலைவர் எனும் அடையாளத்தோடு, குறித்த கடிதம் அனுப்பப்பட்டு இருக்கின்றது.

மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் தொடர்பில், தமிழ்த் தேசிய கட்சிகளை இணைத்துக் கொண்டு கடிதமொன்றை வரைவது தொடர்பில் டெலோ, கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் சம்பந்தனுக்கு, எந்தவொரு தருணத்திலும் அறிவிக்கவில்லை. தமிழரசுக் கட்சித் தலைவரான மாவை சேனாதிராஜாவுக்கு அழைப்பு விடுத்து, அவரும் அந்தச் சந்திப்புகளில் கலந்து கொண்டிருக்கின்றார்.

இரு தசாப்த காலமாக, தாங்கள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் தலைமைக்கு அறிவிப்பு விடுக்காமல், இன்னோர் அணியொன்றை அமைக்கும் முயற்சிகளை டெலோ முன்னெடுக்கின்றது என்றால், அது செல்வம் அடைக்கலநாதனதோ, குருசாமி சுரேந்திரன் உள்ளிட்டவர்களின் துணிச்சலான நடவடிக்கை என்று மாத்திரம் கொள்ள முடியாது.

ஏனெனில், கூட்டமைப்பு சார்ந்து தமிழரசுக் கட்சி ஏக நிலையில் முடிவுகளை எடுத்த அனைத்துத் தருணங்களிலும், டெலோ அதற்கு இணங்கியே சென்றிருக்கின்றது. அவ்வாறான இணக்கம், தவறு என்று சுட்டிக்காட்டப்பட்ட போதெல்லாம், தேர்தல் வெற்றி - தோல்விகளைக் கருத்தில் கொண்டு செல்வம் அடைக்கலநாதன் அமைதியாகவே இருந்தார்.

அப்படிப்பட்ட சுபாவத்தைக் கொண்டிருப்பவரின் எண்ணங்களில், கூட்டமைப்பைத் தாண்டிய சிந்தனையொன்று ஏற்பட்டு, அது செயலுருவம் பெறுகின்றது என்றால், அந்தப் பின்னணியை ஆய்ந்து ஆராய வேண்டியும் ஏற்படுகின்றது.

சம்பந்தன் காலத்துக்குப் பின்னராக கூட்டமைப்பின் தலைமைத்துவம் என்பது, தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அல்லது சிவஞானம் சிறிதரன் உள்ளிட்டவர்களிடம் பகிரப்படும் சூழலே காணப்படுகின்றது.

சிறிதரனின் இலக்கு, தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் என்கிற அடிப்படையில், கூட்டமைப்பின் தலைமைத்துவம் சுமந்திரனிடம் செல்லும் வாய்ப்புகளே உண்டு.

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னரான நாள்களில், பிராந்திய வல்லரசின் தூதுவராலய அரசியல் பிரிவு அதிகாரிகள், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் நடத்திய பேச்சுகளின் போது, இந்த விடயம் அதிகமாக விவாதிக்கப்பட்டது.

பிராந்திய வல்லரசுக்கு, சுமந்திரன் மீது குறிப்பிட்டளவான அதிருப்தி உண்டு. ஏனெனில், தங்களது எல்லா இழுப்புகளுக்கும் அவர் வளைந்து கொடுக்கமாட்டார் என்பது அதற்கான காரணம். அப்படியான சூழலில், கூட்டமைப்புக்கு மாற்றாக பலமான கூட்டணியொன்றைத் தமிழ்ச் சூழலில் உருவாக்கி, தங்களது அனைத்து ஆணைக்கும் ஆடும் ஒரு பொம்மையைத் தலைவராக்க வேண்டும் என்பது அவா.

அந்த எண்ணப்பாடுகளின் போக்கில்தான், டெலோவையும் புளொட்டையும் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வைத்து, விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணிக்கான அத்திவாரத்தைப் போடுகின்றது.

இந்தப் பின்னணியில்தான், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் வெற்றிக்காகத் தங்கியிருக்கும் சூழலில் இருந்து வெளியேறும் துணிவு டெலோவுக்கு வருவதற்கு காரணமாகும்.

கூட்டமைப்பின் நிலைப்பாடுகளுக்கு மாறாக, தலைமைக்கு அறிவிக்காமல் டெலோவும் புளொட்டும் நடந்து கொண்ட விதம், தார்மிகத்துக்கு புறப்பானது என்று தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் சுமந்திரன் குறைபட்டார். அவர், ‘துரோகிகள்’ என்கிற வார்த்தையை பயன்படுத்தவில்லையே அன்றி, அவர்களை நோக்கி, கடந்த கால ‘அரச ஒத்தோடிகள்’ என்கிற அடையாளத்தையும் பதிவு செய்தார்.

இவ்வாறான பிரளங்களுக்குப் பின்னரும் சம்பந்தனோ, கூட்டமைப்பை யாராலும் பிளவுபடுத்த முடியாது, கூட்டமைப்பு தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பணிக்கும் என்று கூறியிருக்கின்றார்.

கூட்டமைப்பு தோற்றம் பெற்றது முதல், அதன் தலைவராக சம்பந்தன் இருந்து வந்தாலும், உத்தியோகபூர்வ கடிதங்களில் கையெழுத்திடும் போது, அவர் தன்னை தமிழரசுக் கட்சியின் பாராளுன்றக் குழுத் தலைவர் என்றே குறிப்பிட்டு வந்திருக்கின்றார். 2015க்குப் பின்னரே, அவர் தன்னை கூட்டமைப்பின் தலைவர் என்று குறிப்பிட்டு கடிதங்களில் கையெழுத்திட்டார்.

ஆனால், இன்றைக்கு மீண்டும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் எனும் அடையாளத்துக்கே சம்பந்தன் செல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில், கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியைத் தவிர, இருந்தவர்கள் எல்லோரும் வெளியேறிச் சென்றுவிட்டதான சூழலே இன்றிருக்கின்றது.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், கூட்டமைப்பு பெற்ற ஏக நிலை வெற்றியோடு, அதன் வீழ்ச்சி ஆரம்பித்திருந்தது. இந்தப் பத்தியாளர் அதனை அடிக்கடி சுட்டிக்காட்டியும் வந்திருக்கின்றார். கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், அது அப்பட்டமாக வெளிப்பட்டது. மக்களுக்கான நலன், நீதிக் கோரிக்கைகள் என்கிற நிலைகள் தாண்டி தனிப்பட்ட நலன், பதவி, பகட்டு அதற்கான குழிபறிப்புகள் என்பதே அரசியல் என்ற நிலைப்பாட்டுக்குள், கூட்டமைப்பின் கட்சிகளும் அதன் தலைவர்களும் எப்போதோ வந்துவிட்டார்கள்.

அந்த நிலைதான், இந்தச் சீரழிவுக்கு முக்கிய காரணம். அதற்கான பொறுப்பை சம்பந்தன் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக, பல பேரின் இரவு - பகல் பாராத உழைப்பால் உருவாகிய கூட்டமைப்பு என்கிற ஓர் உன்னத அடையாளம், கண் முன்னாலேயே, அழிந்து போவதைக் காணுவது வேதனையானது. இப்போது அதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

## கடிதங்கள்

### கிராமசேவை அலுவலகங்களை நோக்கி

### ஊரடங்கிலும் வீதிகளில் அலையும் மக்கள்

வவுனியாவில் இரண்டாம் கட்ட தடுப்பூசி பெறுவதற்காக, ஆங்கில விண்ணப்பப்படிவம் கிராம அலுவலர் ஊடாக வழங்கப்படுவதால், கிராம அலுவலகங்களை நோக்கி, மக்கள் அதிகளவில் செல்லத்தொடங்கி உள்ளனர். இதனால், கொரனா பரவும் அபாயம் உள்ளதாக மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தடுப்பூசியை பெற, கிராம அலுவலரிடம் விண்ணப்பத்தைப் பெற்று, அதை ஆங்கிலத்தில் நிரப்பி, கிராம அலுவலரின் கையொப்பம் பெற்று, அதைத் தடுப்பூசி வழங்கும் இடங்களில் ஒப்படைக்க வேண்டும்.

கொரனா அச்சம் காரணமாகவும் அலைச்சல் மற்றும் ஆங்கிலப் படிவத்தை நிரப்பும் அசௌகரியம் போன்றவை காரணமாக பலர் தடுப்பூசியைப் பெறச் செல்லாது இருக்கின்றனர்.

வேறு மாவட்டங்களில் பின்பற்றப்படாத புதிய நடைமுறையாக, ஆங்கில விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்காக மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இதனால், ஊரடங்கு வேளையிலும் கிராம அலுவலர் அலுவலகங்களை நோக்கி, மக்கள் வீதியில் அலையும் நிலை வவுனியாவில் ஏற்படுத்தப்பட்டு உள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் கொரனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில், கிராம அலுவலர் அலுவலகத்தில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

க. அகரன்

# உலருணவு வழங்கி வைப்பு



அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் களப்பணியாற்றிவரும் ஊடகவியலாளர்களுக்கு கொரோனா பாதுகாப்பு கவசம் மற்றும் உணவுப்பொதிகளை வைத்தியர் எஸ்.எம். தௌதரால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு, சிலோன் மீடியா போரத்தின் சாய்ந்தமருது தலைமைக் காரியாலயத்தில் அதன் தலைவர் கலாநிதி றியாத் ஏ மஜீத் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(நூருல் ஹுதா உமர்)

# 1967 நண்பர்கள் குழாம்





காரைதீவு 1967 நண்பர்கள் குழாமால் 1,700 ரூபாய் பெறுமதியான 125 உலருணவுப்பொதிகள் கல்முனை, காரைதீவு மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது. பிரான்ஸில் வாழும் நண்பர்கள் குழும உறுப்பினர் ச. தேவகடாட்சத்தின் உறவுகள் வழங்கிய நிதியுதவியைக்கொண்டு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

காரைதீவு 1967 நண்பர்கள் குழுமத்தலைவரும் மட்டு. பிரதி மாகாண நீர்ப்பாசன பணிமனை விசேடதர படவரைஞருமான செ. மணிச்சந்திரன் தலைமையில் இவ்விநியோகம் நடைபெற்றது. அச்சமயம் பிரான்ஸிலிருந்து வந்த ச. தேசகடாட்சமும் சமுகமளித்திருந்தார். குறித்த நண்பர்கள் குழுமியம் காரைதீவில் 1967இல் பிறந்தவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அமைத்த ஒரு குழுவென்பது குறிப்பிடத்தக்கது.

(வி.ரி. சகாதேவராஜா)

## வர்த்தக சங்கத்தின் உதவி



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொரோணா தடுப்பு ஊசியை செலுத்திக் கொண்டிருக்கும் அனைத்து மத்திய நிலையங்களிலும் பணியாற்றும் வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்குமான குளிர்பானங்களையும் தண்ணீர் போத்தல்களையும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் வழங்கியுள்ளது.

(செ. கீதாஞ்சன்)

## ஸ்மார்ட் போன் வழங்கல்



அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மலைய சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் டிஜிட்டல் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன் வறிய மாணவர்களுக்கு, மூன்றாம் கட்டமாக ஸ்மாட் போன் வழங்கும் நிகழ்வு, வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி பணிமனையில் உதவிக் கல்விப் பணிப்பாளரும் வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டு மூத்த ஆலோசகருமான பீ. என். சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

# 10 இலட்சம் ரூபாய் நிதி உதவி



முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தல் ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, இலண்டன் வாழ் புதுவை உறவுகளான திருநாவுக்கரசு கேதீஸ்வரன் (கேதீஸ்), ஆ. தர்மலிங்கம் இன்பவரன் (இன்பன்), இ. கிருஷ்ணபிள்ளை அமுதலிங்கம் (அமுதன்), ஈ. சபாரத்தினம் குணேஸ்வரன் (குகன்) ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் பத்து இலட்சம் ரூபாய் நிதியை வறுமைக்குட்பட்ட 500 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் வீதம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

# கட்டில்கள் வழங்கி வைப்பு





நுவரெலியா சினிசிட்டா தனிமைப்படுத்தல் முகாமுக்கு பெரெண்டினா நிறுவனத்தின் பிரதி முகாமையாளர் பா.மொ. ரஹீம் தலைமையில் 52,500 ரூபாய் மதிப்புள்ள கட்டில்கள், பிரதி வலய தொற்று நோயியல் வைத்தியர் எல்.எல்.எஸ்.கே லியானகே, பல் வைத்திய நிபுணரும் கொரோனா தடுப்புகுழு உத்தியோகத்தருமான ஏ.எம்.சி.டீ சில்வா ஆகியோரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டன.

(நீலமேகம் பிரசாந்த்)

சென்னை

# எங்களது திட்டங்களை தி.மு.க புறக்கணிக்கிறது

## குற்றம்சாட்டுகிறார் பழனிசாமி

அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் கொண்டுவந்த அனைத்து திட்டங்களையும் திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் புறக்கணிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று நடைபெற்ற சட்டசபை கூட்டத்தொடரின்போது, அ.தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முடக்கப்பட்டிருப்பது குறித்துப் பேச அனுமதி மறுக்கப்பட்டதாக கூறி, சட்டசபையில் இருந்து அ.தி.மு.க எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி கூறியதாவது: சட்டசபையில் சில கருத்துகளை



எடுத்துரைக்க வாய்ப்பு அளிக்கவில்லை. பேச அனுமதி மறுக்கப்படுகிறது. இதனால் வெளிநடப்பு செய்துள்ளோம்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டுவந்த வேளாண் விற்பனைக்குழு திரும்பப் பெறப்படும் என்று தி.மு.க சட்டமூலம் கொண்டு வந்துள்ளது. மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் ஜெயலலிதா பல்கலைக்கழகம் கொண்டுவர அனைத்தும் திட்டமிட்டு பணிகள் தொடங்கிய நிலையில் தி.மு.க அரசாங்கம் அதனை புறக்கணித்தது. அ.தி.மு.க கொண்டுவந்த அனைத்து திட்டங்களையும் தி.மு.க அரசாங்கம் புறக்கணிக்கிறது.

'தாலிக்குத் தங்கம்' திட்டத்துக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதித்து ஏழை, எளிய பெண்களுக்கு கிடைக்காமல் வழிவகை செய்திருக்கிறார்கள். இதைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு சட்டசபையில் அனுமதி கேட்ட நிலையில், அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எங்களுடைய பேச்சையும் அவைகுறிப்பில் இருந்து எடுத்துவிட்டார்கள்' என்று கூறினார்.

நாமக்கல்



# கொதிக்கும் எண்ணெய்யை கணவன் தலையில் ஊற்றிய மனைவி

குடும்பத் தகராறில், ஆத்திரம் அடைந்து, கொதிக்கும் எண்ணெய்யை, தலையில் ஊற்றி, கணவரை கொலை செய்த மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாமக்கல் ஏ.எஸ். பேட்டையை சேர்ந்த தையல் தொழில் செய்து வந்த இவர், தினமும் குடித்துவிட்டு வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். மேலும், போதையில், மனைவி, குழந்தைகளை தகாத வார்த்தையால் பேசுவதுடன், அடித்து துன்புறுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், அன்று மாலை, 6.30 மணிக்கு, போதையில் வந்த கணவன், வழக்கம் போல், தனது மனைவி, குழந்தைகளை திட்டியதுடன், அடித்து துன்புறுத்தி உள்ளார். அதனால், ஆத்திரம் அடைந்த மனைவி, காய்ச்சி வைத்திருந்த எண்ணெய்யை எடுத்து, தனது கணவனின் தலையில் ஊற்றினார். வலியால் கதறி துடித்த கணவரை, அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் மீட்டு, நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மருத்துவமனையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவரிடம், நாமக்கல் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி ஜெயந்தி, மரண வாக்குமூலம் பெற்றார். அதில், 'என் மீது, கொதிக்கும் எண்ணையை ஊற்றியது, எனது மனைவி தான்' எனத் தெரிவித்தாக தெரிகிறது.

இதற்கிடையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி, அதிகாலை, 5.30 மணிக்கு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக, நாமக்கல் பொலிஸார் வழக்கு பதிந்து, மனைவியை கைது செய்து விசாரிக்கின்றனர்.

கர்னால்

# கர்னாலில் மாவட்ட தலைமை அலுவலகம் முற்றுகை

ஹரியானா மாநிலம் கர்னாலில் மாவட்ட தலைமை அலுவலகத்தை முற்றுகையிட விவசாயிகள் பேரணியாக சென்றதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள விவசாய சட்டங்களுக்கு எதிராக புதுடெல்லி எல்லையில் ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களின் விவசாய அமைப்புகளை சேர்ந்தவர்கள் ஒன்பது மாதத்துக்கு மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் கர்னாலில் சமீபத்தில் முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் தலைமையில், பாரதிய ஜனதா ஆலோசனை கூட்டம் நடந்தது. முதலமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாய அமைப்புகள் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தனர்.

இதையடுத்து தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தடையை மீறி பேரணியாக வந்த விவசாயிகளை தடியடி



நடத்தி பொலிஸார் விரட்டி அடித்தனர். இந்நிலையில் விவசாயிகள் மீது நடத்தப்பட்ட தடியடியைக் கண்டித்து, கர்னாலில் மஹா பஞ்சாயத்து கூட்டம் நடத்தி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என, விவசாய அமைப்புகள் அறிவித்திருந்தன.

இதையடுத்து கர்னாலில் விவசாயிகள் அதிகளவில் குவிந்தனர். பிரச்சினைக்கு தீர்வு காண விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் மாவட்ட நிர்வாகம் நடத்திய பேச்சு தோல்வியடைந்தது. இதையடுத்து கலெக்டர் அலுவலகம் நோக்கி விவசாயிகள் பேரணியாக சென்றனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

சென்னை

# மூன்று வயது குழந்தைக்கு பாலியல் தொந்தரவு

மூன்று வயது குழந்தைக்கு பாலியல் தொந்தரவு அளித்தவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சென்னை போக்ஸோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை, வியாசர்பாடியைச் சேர்ந்தவர், அதே பகுதியைச் சேர்ந்த 3 வயது குழந்தைக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக அந்த குழந்தையின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், எம்கேபி நகர் பொலிஸார் வழக்கு பதிவு செய்து, அவரைக் கைது செய்துள்ளனர்.

சென்னை போக்ஸோ சிறப்பு நீதிமன்றத்தில், நீதிபதி ராஜலட்சுமி முன்னிலையில் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி ராஜலட்சுமி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை, 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். மேலும், பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்துக்கு தமிழக அரசாங்கம் ரூ.5 இலட்சம் இழப்பீடு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பெங்களூர்

# சிறையில் சிறப்பு சலுகைகளுக்காக சசிகலா கொடுத்த இலஞ்சம்

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவுக்கு பெங்களூர் சிறையில் சிறப்பு சலுகைகள் வழங்க, 2 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்ற இரண்டு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க, ஊழல் ஒழிப்பு படைக்கு, 30 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா சொத்து குவிப்பு வழக்கில், 2017ஆம் ஆண்டு தண்டனை பெற்று, கர்நாடக மாநிலம் பெங்களூர் பரப்பன அக்ர ஹாரா மத்திய சிறையில் அடைக்கப்பட்டு, கடந்த ஜனவரியில் விடுதலை செய்யப்பட்டார். சிறையில் இருக்கும் போது அவருக்கு சொகுசு வசதிகள் செய்து கொடுத்ததாகவும், அதற்காக சிறை அதிகாரிகள், 2



கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றதாகவும், அப்போதைய டி.ஐ.ஜி ரூபா குற்றம் சாட்டியிருந்தார்.

சசிகலா சிறையில் இருந்த போது அவருக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டது உண்மை என ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி வினய்குமார் தலைமையிலான உயர்மட்ட குழு அறிக்கை தாக்கல் செய்திருந்தது. இந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என, ஊழல் ஒழிப்பு பொலிஸ் பிரிவில், 2018இல் புகார் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சென்னை

# பாடலாசிரியர் புலமைப்பித்தன் காலமானார்



சினிமா பாடலாசிரியரும் தமிழக சட்ட மேலவையின் முன்னாள் துணைத் தலைவராகவும் இருந்த புலமைப்பித்தன் வயது மூப்பின் காரணமாக சென்னை தனியார் மருத்துவமனையில் தனது 86ஆவது வயதில் காலமானார்.

சினிமா பாடலாசிரான கவிஞர் புலமைப்பித்தன் உடல்நலக் குறைபாடு காரணமாக கடந்த வாரம் சென்னை, அடையாறில் உள்ள போர்ட்டிஸ் மலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வயது மூப்பின் காரணமாக உறுப்புகள் செயற்பாடு குறைவு ஏற்பட்டதால் அவருக்கு வெண்டிலேட்டர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொடர் மருத்துவக் கண்காணிப்பில் இருந்த அவர், நேற்றுக் காலை 9.33 மணியளவில் சிகிச்சை பலனின்றி காலமானார்.

பின்லேடனின் மகன் என்பதால்

# ராஜ வாழ்க்கை வாழவில்லை

"பின்லேடனின் மகன் என்பதால் ராஜ வாழ்க்கை வாழவில்லை" என அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனின் மகன் ஓமர் பின்லேடன் தெரிவித்துள்ளார்.

பிரபல ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தந்தையின் மறைவுக்குப் பின்னர், அல் கொய்தா அமைப்பின் தலைமை பொறுப்புக்கு வர நான் வற்புறுத்தப்பட்டேன். ஆனால் அதனை நிராகரித்து விட்டேன். நான் அல் கொய்தா அமைப்பில் இணைந்திருந்த காலங்கள் முட்டாள்தனமானவை. அது எனது வாழ்க்கையை வீணாக்கியது என்பதை, பின்னர் உணர்ந்து கொண்டேன்.

நானும் எனது சகோதரனும் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சுறுத்தலோடு தான் வாழ்க்கையை நகர்த்தி வந்தோம்

மேலும் எனது மனைவியுடன் இணைந்து இஸ்ரேல் செல்ல திட்டமிட்டு வருவதாகவும், வாழ்க்கையில் ஒரு முறையாவது அமெரிக்கா செல்ல வேண்டும் என்பது தனது கனவு எனவும் ஓமர் பின்லேடன் தெரிவித்துள்ளார்.

கனடா




## கனடா பிரதமர் ஜஸ்டின் மீது கல்வீச்சு

கனடாவில் நாடாளுமன்றத் தேர்தலானது எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தேர்தலை ஒட்டிய பிரசார நிகழ்வுகளும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க, கொரோனாத் தடுப்பூசியை கட்டாயமாக்கும் உத்தரவுகள் மற்றும் பிற கட்டுப்பாடுகளுக்கு எதிராக மக்கள் நடத்திவரும் போராட்டங்களும் அங்கு அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த வாரம் அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒண்டாரியோ மாகாணத்தில் பிரசாரம் செய்ய திட்டமிட்டிருந்த நிலையில், பிரசாரம் நடைபெற இருந்த இடத்தில் போராட்டக்காரர்கள் திரண்டு அவருக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. குறிப்பாக போராட்டக்காரர்கள் கற்களையும் குப்பைகளையும் அவர் மீது வீசினர். அதில் சில கற்கள் ஜஸ்டின் ட்ரூடோவின் தோள்பட்டையில் விழுந்தன.

இதைத் தொடர்ந்து அவரது பாதுகாவலர்கள் அவரை பத்திரமாக வேனில் ஏற்றி அங்கிருந்து அழைத்து சென்றனர். எனினும் இக் கல்வீச்சில் அவருக்கு பெரிய அளவில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

ஐ.நாவால் தீவிரவாதிகளாக அறிவிக்கப்பட்ட

## ஐவர் அமைச்சர்களாக நியமனம்

தலிபான்களின் இடைக்கால அரசில் ஐ.நாவால் தீவிரவாதிகள் என அறிவிக்கப்பட்ட 5 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



தலிபான் அமைப்புடன் நெருங்கிய உறவினைப் பேணிய முல்லா ஹசன் அகுந்த் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவால் தலைக்கு 10 மில்லியன் டொலர்கள் வைக்கப்பட்டுள்ள சிராஜுதீன் ஹக்கானி உட்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அமெரிக்காவால் பயங்கரவாதக் குழுவாக அறிவிக்கப்பட்டுள்ள ஹக்கானி அமைப்பை சேர்ந்தவர். அல் கொய்தாவுடன் இணைந்து பல தற்கொலைத் தாக்குதல்களை இந்த அமைப்பு நடத்தியுள்ளதாக அமெரிக்கா கூறுகிறது.

தலிபான் அமைச்சர்களாக ஐ.நாவால் தீவிரவாதிகளாக அறிவிக்கப்பட்ட 5 பேரில் முல்லா முஹம்மது யாக்கூப், அமீர் கான் முத்தகி ஆகியோரும் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா

## சிறைச்சாலை தீ; 41 கைதிகள் மாண்டனர்

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள சிறைச்சாலையில் நேற்று (08) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில், 41 கைதிகள் உடல் கருகி உயிரிழந்துள்ளதாகவும், 39 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்படும் குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்த தங்கெராங்க சிறைச்சாலையிலேயே இத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் சிறைக் கைதிகள் மட்டுமே அடைக்கப் போதுமான இச் சிறைச்சாலையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் அடைக்கப்பட்டிருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள.

சிறைச்சாலையில் தீ விபத்து நேரிட்ட கட்டடத்தில், 122 சிறைக் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தீ விபத்து தகவல் அறிந்ததும் விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். உடனடியாக அக் கட்டடத்தில் இருந்த ஏனைய கைதிகள் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதோடு இது குறித்த விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

சிறையில் இருந்து தப்பிச் செல்லவும், வன்முறைகளில் ஈடுபடவும் இந்தோனேசிய சிறைகளில் அடிக்கடி தீ வைக்கப்படுவதாக கூறப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

சீனா



## 40 வருடங்களாக உறங்காத பெண்

### அதிர்ச்சியில் மருத்துவர்கள்

சீனாவில் பெண் ஒருவர் மருத்துவரிடம் கூறிய விடயம் சீன மருத்துவ உலகத்தையே மிரளச் செய்துள்ளது.

சீனாவின் கிழக்கு மாகாணமான ஹெனானைச் சேர்ந்தவர் லி ஸானிங். இவருக்கு தற்போது வயது 45 ஆகிறது. ஆயினும், தான் இறுதியாக தூங்கியெழும்பியது தனது 5 ஆவது வயதில் என அவர் வைத்தியர்களிடம் தெரிவித்துள்ளார். இவ்விடயம் மருத்துவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.


இவரது கூற்றை இவரது கணவரும் உறுதி செய்துள்ளார். ஊரே உறக்கத்தில் இருக்கும் போது, தனது மனைவி வீட்டைச் சுத்தம் செய்வது உள்ளிட்ட வேலைகளில் மும்முரமாக இருப்பார் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மனைவியின் இந்த தூங்காத நிலையால் கவலை கொண்டு தான் தூக்க மாத்திரைகள் வாங்கிக் கொடுத்ததாகவும் அதனாலும் பலனேதும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே மருத்துவர்கள் குழு முன்னெடுத்த தீவிர பரிசோதனையில், லி ஸானிங் தூங்குகிறார். ஆனால், அது விசித்திரமான முறையில் நடக்கிறது எனக் கண்டறிந்தனர்.

லி ஸானிங் தனது கணவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது, அவரது கண் இமைகள் கவிழ்வதை மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதுவே, அவர் தூக்கத்தில் இருப்பதை உணர்த்துவதாகவும், ஆனால், அப்போதும் அவர் பேசிக் கொண்டிருந்ததை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும், ஒரு நாளுக்கு 10 நிமிடங்களுக்கு மேல் அவரது கண்கள் மூடவில்லை என்பதையும் மருத்துவர்கள் சோதனையில் கண்டறிந்துள்ளனர்.

இஸ்ரேல்



## தூங்கிய அதிகாரிகள்; தப்பிச்சென்ற கைதிகள்

பலத்த பாதுகாப்பு நிறைந்த இஸ்ரேலின் கில்போவா சிறையிலிருந்து பலஸ்தினத்தை சேர்ந்த 6 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த சிறையில் இருந்து சுரங்கம் அமைத்து 6 பலஸ்தீன கைதிகளும் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கைதிகள் சுரங்கப் பாதையில் இருந்து சுற்றுச் சுவரைத் தாண்டி வெளியேறுவதும், கண்காணிப்புப் பணியில் இருந்த அதிகாரிகள் தூங்கியபடி இருப்பதுமான சி.சி.டி.வி காட்சிகள் வெளிவந்துள்ளன.

அமெரிக்க ஓபன் டெனிஸ்

# மெட்வதேவ், ஷபலென்கா அரையிறுதிக்கு தகுதி

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்றுவரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டிகளின் அரையிறுதிக்கு ரஷ்யாவின் டேனில் மெட்வதேவ் மற்றும் பெண்கள் ஒற்றையரில் பெலாரஸின் அரைனா ஷபலென்கா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.





ஆண்கள் ஒற்றையர் பிரிவில், உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள ரஷ்யாவின் டேனில் மெட்வதேவ், கால் இறுதி போட்டியில் நெதர்லாந்தைச் சேர்ந்த பொடிக் வன் டி ஷாண்ட்ஸ்குல்ப்பை எதிர்கொண்டார்.

இதில் மெட்வதேவ் 6-3, 6-0, 4-6, 7-5 என்ற செட் கணக்கில் வென்று அரை இறுதிக்கு தகுதி பெற்றார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற அமெரிக்க ஓபனில் 2ஆவது இடத்தை பிடித்த அவர் தொடர்ந்து 3ஆவது முறையாக அரை இறுதிக்குள் நுழைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரை இறுதியில் கனடாவைச் சேர்ந்த அகுர் அலிஸ்மியை மெட்வதேவ் எதிர்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த காலிறுதிப் போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான பெலாரஸை சேர்ந்த அரைனா ஷபலென்கா, 8ஆவது நிலையில் உள்ள செக் குடியரசின் பார்பரா கிரஜ்கோவா ஆகியோர் மோதினர்.

இதில் ஷபலென்கா 6-1 , 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று முதல் முறையாக அமெரிக்க ஓபன் அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், உக்ரைனின் 5ஆம் நிலை வீராங்கனையான எலினா சுவிட்டோலினா, கனடாவை சேர்ந்த 19 வயதேயான லேலா பெர்னாண்டஸிடம் 6-3, 3-6, 7-6 (7-5) என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அரையிறுதிப் போட்டியில் ஷபலென்கா- லேலா பெர்னாண்டஸ் ஆகியோர் மோதவுள்ளனர்.




ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர்

## ஒருநாள் தொடரை வென்றது இலங்கை

### ஜனாதிபதி புகழாரம்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் தொடரைக் கைப்பற்றிய இலங்கை அணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, டுவிட்டர் பதிவின் மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

வெற்றிக்காக உழைத்த அணி வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 78 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளதுடன், 2-1 என தொடரையும் கைப்பற்றியது.

18 மாதங்களுக்குப் பின்னர் இலங்கை அணி தொடர் ஒன்றைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (07) பகலிரவு போட்டியாக நடைபெற்ற இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சரித் அசலங்க 47 ஓட்டங்களையும் தனஞ்ஜய டி சில்வா 31 ஓட்டங்களையும் பெற்றனர். தென் ஆபிரிக்கா அணி சார்பில் கேஷவ் மஹராஜ் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

204 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்ஆபிரிக்கா, 30 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அவ்வணி சார்பில் துடுப்பாடிய ஹென்றிச் க்ளாசென் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

பந்து வீச்சில் மஹீஸ் தீக்ஷண 4 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர, வனிது ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக துஷ்மந்த சமீரவும் தொடர் நாயகனாக சரித் அசலங்கவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கோலி இருக்கும் வரை

## டெஸ்ட் கிரிக்கெட் வாழும்

"இந்திய அணியில் உள்ள அனைத்து வீரர்களின் மதிப்பையும், ஆதரவையும் கோலி பெற்றுவிட்டார். அவருக்காக விளையாட ஏனைய வீரர்கள் விரும்புகிறார்கள். அவரின் தலைமையை விரும்புகிறார்கள்" என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேன் வார்ன் தெரிவித்துள்ளார்.



தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே இவ்விடயத்தைக் கூறியுள்ளார்.

"கோலியை அனைவரும் நிமிர்ந்து பார்க்கிறார்கள், அனைத்து வீரர்களின் ஆதரவையும் கோலி பெற்றுவிட்டார். கோலிக்கு ஆதரவாக அனைத்து வீர்ரகளும் இருக்கிறார்கள், அவருக்காக விளையாடுகிறார்கள்.

அணி தனக்காக விளையாடுவது என்பது தலைவனுக்கு முக்கியமானது. விராட் கோலியின் நடத்தைதான் காரணம் என்று நான் நினைக்கிறேன்.

நன்றி விராட் கோலி. அணியை நீங்கள் வழிநடத்தும் விதம் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

விளையாட்டில் நம்பிக்கை, நம்பகத்தன்மை முக்கியமானது. அந்த நம்பிக்கையை அணிக்கு கோலி அளித்துள்ளார், விராட் கோலி இருக்கும்போது டெஸ்ட் கிரிக்கெட் நீண்டகாலம் வாழும்" எனத் தெரிவித்தார்.

இந்தியா – இங்கிலாந்து

## இறுதி டெஸ்ட் நாளை

### பட்லர், ஜக் லீச் அழைப்பு

இந்தியாவுக்கு எதிராக மான்செஸ்டரில் நாளை (10) இடம்பெறவுள்ள 5ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் 4ஆவது போட்டிக்கு ஓய்வு அளிக்கப்பட்ட விக்கெட் காப்பாளர் ஜோஸ் பட்லர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார். மான்செஸ்டர் ஆடுகளம் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமானது என்பதால், சுழல்பந்து வீச்சாளர் ஜக் லீச்-ம் சேர்க்கப்பட்டுள்ளார்.

5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 5ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நாளை ஆரம்பிக்கவுள்ளது.

இங்கிலாந்து அணி விவரம்:

ஜோ ரூட் (தலைவர்), மொயின் அலி, ஜேம்ஸ் அன்டர்ஸன், ஜோனி பேர்ஸ்டோ, ரோய் பேர்ன்ஸ், ஜோஸ் பட்லர், சாம் கரன், ஹசீப் ஹமீட், டான் லாரன்ஸ், ஜக் லீச், டேவிட் மலான், கிரேக் ஓவர்டன், ஒலி போப், ஒலி ரொபின்ஸன், கிறிஸ் வோக்ஸ், மார்க் வுட்



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 09 செப்டெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.